முருகப்பெருமான் துணை

**மகான் விசுவாமித்திரர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.08.2023**, வியாழக்கிழமை

1. தவராஜனே கலியின் அவதார
   தருமனே ஆறுமுக ஞானியே
   அவனி காக்கும் அம்சமாக
   அறமாக அடையாளம் தந்துவந்த
2. வந்தநல் ஞான தேசிகனே
   வள்ளலே உன் பெருமை கூறி
   சிந்தைபட அறிவுரை ஆசிதனை
   சோபகிருது ஆண்டு யாளி திங்கள்
3. திங்களிலே முன்னான்கீர்திகதி குருவாரம்
   (சோபகிருது வருடம் ஆவணி மாதம் 14 ம் நாள், 31.08.2023, வியாழக்கிழமை)
   தேசிகன் கேட்க விசுவாமித்திரர் யானும்
   ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
   ஓங்கார குடில் படைத்த கணமே
4. படைத்தகணமே ஞானிகள் கூட்டம்
   பிரம்மனோடு தேவர்கள் படை
   சடையோனுடன் மகா சக்திகள்
   சங்கு சக்கரத்தானுடன் அனைத்து பேரும்
5. பேருமே ஆறுமுகனார் சபையென
   பெருஞ்சக்தி வழங்கி இறங்கி
   பேரருள்பட காத்து வருக
   பிரணவக்குடில் ஞானம் வேண்டுபவர்க்கு
6. வேண்டுபவர்க்கு தென் கயிலை
   வேண்டிய வரம் தந்தருள
   உண்டாக்கி தரும சேவையாக
   உயிர்கொலை நீக்கி வாயென

7. வாயென அரங்கன் தருகின்ற
வாய்மையே ஞான உபதேசம்
தாயெனும் கருணைபட அரங்கனருள
தரணியோர் தேடிவந்தாலே போதும்
8. போதுமப்பா ஞான வாழ்வு
புண்ணிய வகைபட இனிதே கிட்டும்
ஆதரவாய் இறைபலம் அடைய
அரங்கமகான் ஆசி துணை வரும்
9. வருகவே பிறவித் தொடர்பு வழி
வளருகின்ற வருகின்ற தீவினை
குருவழி குருவருள் பாதை நெருங்க
கூறிடுவேன் முழுமைபட அகன்று
10. அகன்று தானென்ற செருக்குடன்
அகந்தை அனைத்தும் விலகி
வகைபட சகல வகையிலும்
வாய்மைபட தருமப்படி வாழும்
11. வாழும் ஞானவான்கள் ஆக
வடிவேலனார் ஆசி துணை கூடி
காலம் வெல்லும் ஞானிகளாவர்
கலியுகத்தையே ஞானயுகமாக்குவர்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—